## முதல்வர் ஜோசப் விஜய் எந்த வகையிலாவது

# காவிரி தண்ணீரை நமக்குக் கொண்டுவர வேண்டாமா?

## திருச்செந்தூரில் முன்னாள் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பேச்சு!

தென்திருப்பேரை, ஆக.4 –

பட்ஜெட் கூட்டத் தொடரில் ஒரு கேள்விகளுக்கு கூட பதில் அளிக்க முடியாத ஒரு முதல்வராக தமிழ்நாட்டின் முதல்வர் ஜோசப் விஜய் இருப்பார். எந்த வகையிலாவது காவிரி தண்ணீரை நமக்கு கொண்டுவர வேண்டாமா, அனிதா ராதாகிருஷ்ணன் பேச்சு.



திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் அனிதா ராதாகிருஷ்ணன். முன்னாள் தி.மு.க. அமைச்சரான இவர் தற்போது சட்டமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். இவர் கடந்த சில தினங்களாக தனது சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கிராமம் கிராமமாக சென்று பூத் கமிட்டி உறுப்பினர்களை சந்தித்து வாக்குகள் பெற்ற விபரமும் எதற்காக குறைந்த வாக்குகள் கிடைத்தது என்றும் ஒவ்வொரு பகுதியாக சென்று விளக்கம் கேட்டு வருகிறார்.

அந்த வகையில் நேற்று திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தென்திருப்பேரை மணல்மேடு பகுதியில் பூத் கமிட்டி கூட்டம் நடந்தது. அதில் சிறப்பு விருந்தினராக முன்னாள் அமைச்சரும் தற்போதைய திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினருமான அனிதா ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு பூத் கமிட்டி உறுப்பினர்களிடம் விளக்கங்கள் கேட்டார்.

அப்போது ஒவ்வொரு பூத் கமிட்டி நிர்வாகி களையும் சந்தித்து பூத்தில் வாக்குகள் குறைய காரணம் என்ன என்று விளக்கம் கேட்டார். தொடர்ந்து மேடையில் அவர் பேசுகையில், பொய்யான வாக்குறுதிகளை கொடுத்து அவர்கள் வெற்றி பெற்றுள்ளார் கள். பல் வேறு இடங்களில் வெற்றி பெற்றாலும் பல இடங்களில் குறைவான ஓட்டுகள் மட்டுமே வாங்கி உள்ளார்கள். மதத்தின் பெயராலும், சில ஜாதியின் பெயராலும் வாக்குகளை பிரிக்கும் பணியை அவர்கள் செய்துள்ளார்கள்.

நமது கட்சி கூட்டணி யில் இருந்து வெற்றி பெற்ற கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் கட்சி, விடுதலை சிறு த்தைகள் கட்சிகள் அங்கு சென்று முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்னைக்கு முட்டுக் கொடுப்பதில் இருந்து தள்ளி செல்கிறார்களோ அன்றைய தினம் அனைத்தும் கீழே விழுந்து விடும்.

இதுபோல் இந்த ஆட்சி வெகு சீக்கிரத்தில் விழக் கூடிய நிலையில் உள்ளது. தற்போது காவிரி பிரச்சனை பேசுவதற்காக இங்கிருந்து பெங்க;ர் செல்கிறேன் என்று நமது முதல்வர் சொல்கிறார். அங்கு வராதீர்கள் என்று அவர்கள் எதிர்ப்பு கொடுக்கிறார்கள். இருந்தும் நான் அங்கு செல்கிறேன் என்று கூறுகிறார் முதல்வர்.

இங்கிருந்து அங்கு சென்று இடைஞ்சல் ஏற்பட்டால் அது நமக்கு கேவலம். அவர் நடிகராக இருக்கட்டும் அல்லது வேறு ஏதாவது இருக்கட்டும், தமிழ்நாட்டின் முதல மைச்சர் அங்கு சென்று ஏதாவது நடந்தால் தமிழகத்திற்கு தலைகுனிவு ஏற்படும் நிலைமையை தமிழ்நாட்டு முதல்வர் செய்து வருகிறார். ஐந்து மற்றும் ஆறாம் தேதிகளில் நடைபெற உள்ள பட்ஜெட் கூட்டத் தொடரில் ஒரு கேள்விகளுக்கு கூட பதில் அளிக்க முடியாத ஒரு முதல்வராக தமிழ்நாட்டின் முதல்வர் ஜோசப் விஜய் இருப்பார். வெகு விரைவில் மீண்டும் நமது அண்ணன் மு.க. ஸ்டாலின் ஆட்சி தமிழகத்தில் மலரும் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராமஜெயம், பேரூராட்சி தலைவர் மணிமேகலை ஆனந்த், நகர செயலாளர் முத்து வீரபெருமாள், ஆழ்வை நகரச் செயலாளர் கோபிநாத், ஆழ்வை மத்திய ஒன்றிய அவைத் தலைவர் மகரபூசணம், ஆழ்வை மத்திய ஒன்றிய துணைச் செயலாளர் கோவில் துரை, ஆழ்வை மத்திய ஒன்றிய மாவட்ட பிரதிநிதிகள் பாலசந்தர், செங்கோட்டையன், சோலைநட்டார், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பால்சித்தர், பேரூராட்சி கவுன்சிலர்கள் ஆனந்த், சண்முக சுந்தரம், விவசாய அணி கல்லை பெருமாள், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் லின்ஸி, நகர மகளிர் அணிச் செயலாளர் புஷ்பலதா, வார்டு செயலாளர்கள் மோகன், ஆத்திக்குமார், கண்ணன், ராகவன் சுடலையாண்டி, சீனிவாசன், ஞான பிரகாசம், பெர்லின், கனேசன், அன்புதுரை, முருகன், ரவிக்குமார், கல்லை ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கட்சி தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. திறந்து வைத்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.



நெல்லை மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலம் 51,52,37,45, 46,47 ஆகிய வார்டுகளில் நெல்லை மாநகராட்சி சார்பில் ரூபாய் 2.87 கோடி மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலப்பாளையம் ஜமாலியா தைக்கா தெருவில் நடைபெற்ற நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. பங்கேற்று மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். நிகழ்வில் மேலப்பாளையம் மேற்கு பகுதி பொறுப்பாளர் துபாய் சாகுல், வட்ட செயலாளர்கள் அலி ஷேக் மன்சூர், நரவன் முகைதீன், சாலி மௌலானா உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

# தேவகோட்டையில் சைதை கா.கிட்டு 15 வது ஆண்டு நினைவு தினம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் தி.மு.க.வினர் மரியாதை!

சிவகங்கை, ஆக. 4 -

தென் சென்னைமுன்'னாள் மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சைதை கா.கிட்டு. இவரது சொந்த ஊர் தேவகோட்டை ஒன்றியம் கார்மாங்குடி கிராமமாகும். இவர் கடந்த 3.8. 2011 ஆம் ஆண்டு மறைவெய்தினார். மறைவெய்திய சைதை. கா.கிட்டு உடல் அவரது சொந்த ஊரான கார் மாங்குடி யில் அடக்கம் செய்யப்பட்டது. அவரது நினைவினைப் போற்றும் வகையில் சைதை கா.கிட்டுவின் திருவுருவச் சிலை மற்றும் நினைவிடம் கார் மாங் குடியில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆண்டு தோறும் அவரது நினைவு நாளில் கா. கிட்டு நினைவிடத்தில் தி.மு.க.வினர் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள். நேற்று சைதை கா.கிட்டுவின் 15வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கார்மங்குடி கிராமத்தில் முன்னாள் அமைச்சரும் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கேஆர். பெரிய கருப்பன் தலைமையேற்று மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து சைதை கா.கிட்டு மனைவி திருமதி வள்ளியம்மாள், மகன் கருணா கிட்டு, போஸ், கணபதி, பெத்து, சைதை. கா.கிட்டு சகோதரர் கா.சுப்ரமணியன் ஆகியோர் மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தொடர்ந்து ஒன்றிய செயலாளர்கள் நாகனி ரவி,வே.பூபாலசிங்கம்,லெ.மு. ரவிச்சந்திரன் ,தேவ கோட்டை நகர் கழக செயலாளர் பெரி. பாலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் ஜெ. மதார் சேட் ,நகர் ஒன்றிய கழக நிர்வாகிகள் அன்பு செல்வன், முன்னாள் கவுன்சிலர்கள் ஜாகிர் உசேன், ரவி அயலக அனிராஜா முஹம் மது, முப்பையூர் ரவி, கணேசன், ராஜா,கழக மூத்த முன்னோடிஎம். எஸ். மணி,முன்னாள் ஊராட்சி,மன்ற தலைவர் நாகனிராஜா, கண்ட தேவி அசோக் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துக் குமார் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி மற்றும் நிர்வாகிகள் சுற்றுப் புற கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள் .தொடர்ந்து அன்னதானம் நடைபெற்றது .

சைதை கா.கிட்டு நினைவுதின நிகழ்ச்சி ஏற்பாடுகளை அவரது குடும்பத்தினர் செய்திருந்தார்கள்.

# நதியும் விதியும்!



**ஒரு நதி உற்பத்தி ஆகும்**
**பிரதேசத்தை விட**
**அது ஓடிச்சென்று**
**பயணித்து நிறைவுறும்**
**பகுதிக்கே பயன்பாட்டு**
**உரிமை அதிகம்**
**என்கிறது சர்வதேச**
**நதிநீர்ச் சட்டங்கள்..**
**ஆனால் இதற்கு மாறாக**
**கனமழை காலத்திற்கு**
**வடிகால் பிரதேசமாக மட்டுமே**
**தமிழ்நாட்டைக் கருதுவோம்**
**என்கிறது கர்நாடகம்...**

**மத்தியில் ஆட்சி செய்த**
**அன்றைய காங்கிரஸ்**
**ஆனாலும்**
**இன்று ஆட்சி நடத்துகிற**
**பா.ஜ.க. ஆனாலும்**
**தங்கள் அரசியல்**
**ஆதாயத்துக்காக**
**கர்நாடகத்தின் பக்கமே**
**தலையாட்டுவதை அவை**
**வாடிக்கையாகக்**
**கொண்டிருக்கின்றன..**
**மிகக் கடுமையான**
**சட்டப் போராட்டங்களால்**
**மட்டுமே**
**காவேரி உரிமையை**
**நிலைநாட்டின**
**திராவிட இயக்கங்கள்.**
**இந்த எந்த வரலாறும்**
**தெரியாத புரியாத**
**“அப்ரண்டிஸ்” த.வெ.க.**
**ஆட்சியை பயன்படுத்தி**
**மேகதாது விவகாரத்தை**
**தன்வசப்படுத்தப்**
**பார்க்கிறது**
**கர்நாடக காங்கிரஸ்**
**சர்க்கார்...**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்
குழு துணைத் தலைவர்

## இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியம்

# மணக்குடி ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!

கன்னியாகுமரி, ஆக. 4 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியம், மணக்குடி ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 02.08.2026, ஞாயிறு அன்று மாலை 5.30 மணியளவில் இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் ஜெ.மிலன் தலைமையில் மணக்குடி, ராபின் இல்ல வளாகத்தில் வைத்து நடைபெற்றது.



கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என்.தில்லை செல்வம், ஒன்றிய பொருளாளர் M.ராபின், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர்கள் பி. லாரன்ஸ், சி.பெர்க்குமான்ஸ், கழக நிர்வாகிகள் S.ஜார்ஜ், மரிய கபிலன், அமல்ராஜ், S.சுபிதா உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

மணக்குடி ஊராட்சிக் குட்பட்ட மணக்குடி பொழிமுகம் கால்வாயில் ஆர்.ஏ.எஸ் வாட்டர் ஸ்போர்ட்ஸ் என்ற நிறுவனம் முறையான அனுமதி பெறாமல் பாதுகாப்பற்ற முறையில் சுற்றுலா படகு சவாரி மேற்கொண்டு வருகின்றனர். இந்த பாதுகாப்பற்ற படகு பயணங்களால் விபத்து ஏதும் ஏற்பட்டால் உயிர் சேதம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் இதனை மூடிட வேண்டும் என ஊராட்சி பொதுமக்கள் கோரிக்கையின் படி மாவட்ட நிர்வாகத்தை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

மணக்குடி பகுதியை சார்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள இரண்டு மாதங்களுக்கு மேலாக சிறையில் உள்ள நிலையில் அவர்களை விடுவிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும், மேலும் காலதாமதம் ஏதும் ஏற்படாமல் அவர்கள் விரைந்து தாயகம் திரும்ப தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகத்தை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

கீழமணக்குடி பகுதி மக்களின் குடிநீர் தேவைக்காக இலந்தையடிவிளை பகுதியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட குடிநீர் திட்டத்தை மேலமணக்குடி பகுதி மக்களும் பயன் பெறும் வகையில் நீட்டிப்பு செய்திட ஊராட்சி நிர்வாகம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

கீழமணக்குடியில் பேருந்து நிறுத்தம் முதல் அந்தோனியார் குருசடி தெற்கு கடற்கரை சாலை வரை சுமார் 400 மீட்டர் சாலை வசதி மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் 100 மீட்டர் மட்டுமே தார்ச் சாலை போடப்பட்டுள்ளது. மீதம் உள்ள 300 மீட்டர் தூரத்திற்கும் உள்ள பகுதிகளில் உடனே தார்ச் சாலை அமைத்து தர வேண்டி மாவட்ட நிர்வாகத்தை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.



தென்காசி தெற்கு மாவட்டம் இலஞ்சி பேரூர் 11 வது வார்டு செயலாளர் வே.ராஜ் அவர்களின் மனைவி புற்றுநோய் காரணமாக இயற்கை எய்தினார். தலைமைக் கழகத்திற்கு அனுப்பிய கோரிக்கையை ஏற்று அன்னாரது குடும்பத்திற்கு கல்வி உதவித்தொகை கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் மூலம் கலைஞர் அறக்கட்டளை நிதி ரூபாய் 25,000 ம் காசோலையினை தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கினர். உடன் ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம், கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான் உள்பட பலர் உள்ளனர்.



தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி கிழக்கு ஒன்றியம் இலஞ்சி பேரூராட்சியில் 11 வது வார்டு பகுதியில் செயல்பட்டு வந்த பொது நூலகம் சேதம் அடைந்துள்ளதால் புதிய நூலகத்தை அமைத்துத் தருமாறு சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவனிடம்,தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே. ஜெயபாலனிடமும் பேரூர் கழக இளைஞர் நிர்வாகிகள் கோரிக்கை வைத்தனர்.நடப்பு நிதியாண்டில் அதற்குரிய ஏற்பாடுகளை செய்து தருவதாக சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் உறுதி அளித்தார்.உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.